بسم الله الرحمن الرحيم

**Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.்.பா 05 May 2017**

**(08 Shabaan 1438 Hijira)**

# “MAN & HIS WELL-BEING”

# “மனிதனும் அவனது நலனும்”



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.்.பாத்திஹாவும் ஓதியப்பிறகு **ஹஸ்ரத் கலீ.்.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

சாதாரணமாக மனிதனைப் பொறுத்தவரையில் அவனது நல – வசதிகள் என்பது அவனுக்கு தவிர்த்துக்கொள்ளயியலாத ஒன்றாகும். ஆனால் அதை அவனுக்கு சுயமாக சேர்த்துக் கொள்ள முடியாது. அதைப் போன்றே அவனுக்கு சுயம் அரசனாக ஆகிவிடவும் ஆகாது. அவன் அரசனாக மாறிக்கொள்வது மக்கள் வாயிலாகவேயாகும். மக்கள் இல்லையென்றால் அரசனாகயிருந்தும் என்ன பலன்? மக்கள் இருந்தால் மட்டுமே ஒரு அரசனுக்கு நல-வசதியுடன் வாழ்ந்துக் கொள்ள முடிவது. ஆப்பிரிக்காவை சார்ந்த ஒருவருக்கு அல்லது காட்டில் அகப்பட்ட ஒருவருக்கு அவரின் உயிரினை தக்கவைத்துக்

கொள்வதற்கு அவசியமான வழியும் உணவும் அவருக்கு கண்டுகொள்ள முடிந்துவிடலாம். ஆனால் ஒரு அரசனைப் பொறுத்தவரையில் உண்மை இவ்வாறல்ல. தம் அனுதின வாழ்க்கைக்கு தேவையானதை எப்போதாவது அவருக்கு சுயம் தேடிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகிக்கொண்டால், மிக வருத்தத்தோடல்லாமல் அதை செய்து முடித்திட இயலாது (என்பதே உண்மை).

ஆகவே ஒரு சாதாரண மனிதனைவிட ஒரு அரசருக்கு தம் நல-வசதிகளுக்கு ஏராளமான ஆள்களின் அவசியமிருக்கின்றது. சாதாரண மனிதர்களுக்கு மிக ஏழையான மனிதர்களை விட மிக அதிகமான ஆட்களுடைய சேவை அவசியமாக வருகின்றது. இதிலிருந்து நாம் உணர்ந்துக் கொள்ள வேண்டியது, இந்த தற்காலிக உலகில் நம் நல-வசதிகளுக்கு பிறரின் சேவை நமக்கு அவசியமாகயிருக்கின்றது. பொதுவாக கூறிக்கொண்டால், ஒருவர் தம் நல-வசதிகளுக்கு தனதான வழிகளை தேடிக்கொள்கின்றார். ஒருவர் பசியிலும் தாகத்திலும் அகப்பட்டுக் கொண்டால் அவர் உணவையும் தண்ணீரையும் தேடிசெல்கின்றார். மாறாக அவரிடம் பணம் இல்லாமல் போய்விட்டால், எவரும் இல்லாத நிலையில் அவர் தனிமையில் வேதனையடைகின்றவராக (Oppression) மாறிக்கொண்டால், தம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும் ஆட்களின் உதவியை அவர் தேடிக்கொள்கின்றார். அவர் நோய் வாய்ந்த நிலையில் அகப்பட்டு விட்டால் அவர் மருத்துவரை தேடிச் செல்வதோடு, நோயிலிருந்து மீட்சியை பெற சிகிட்சையும் பெற்றுக் கொள்கின்றார்.

முற்றிலும் பலவீனமான வழிகள் வாயிலாகயிருந்தாலும் அதாவது இறை உதவியின்றி அது ஒரு சிலந்திபூச்சியின் வலையை விட வலிமையற்ற வழிகள் வாயிலாகயிருந்தாலும் சரி, ஒருவர் தம் நல-வசதிகளுக்காக அனைத்து வழிகளையும் தேடிக்கொள்கின்றார். நிச்சயமாக அக்கினிக்கு சூடு எனும் ஆற்றலை வழங்கிக் கொள்பவன் அல்லாஹ்வே ஆவான். கத்திக்கு மூர்ச்சையை வழங்கிக் கொள்பவனும் இறைவனே ஆவான். தண்ணீரும் அல்லாஹ்வின் கட்டுப்பாட்டுக்குள் மட்டுமே நிலை கொள்கின்றது. அல்லாஹ் எப்போது நாடுகின்றானோ அப்போது மழை பொழிகின்றது. வறட்சி தோன்றுவதும் சூறாவளி வீசுவதும் அவனது கட்டளைகளுக்கு ஏற்றவாறாகும். எதிர் பாராத நிலையில் மழை பொழிவதும் அல்லாஹ்வின் விருப்பப்படியேயாகும். மக்களுக்கு நோயிலிருந்து மீட்சியை அளிப்பதும் அவனே ஆவான். ஒரு நபருக்கு (அல்லாஹ் நாடிக் கொண்டால்) சிறுதளவிலான கசாயம் (Herbs) மட்டும் போதும் அவர் நோயிலிருந்து மீட்சியைப் பெற்று விடுகின்றார். அதே நோய்க்கு வேறொருவர் மிக அதிகம் விலையுடைய மருந்து வகைகளை பயன்படுத்திக் கொள்வதன் மூலமாகவே மீட்சியைப் பெற்றுக் கொள்வது. எயர் கண்டிஷன் வசதியுள்ள ஒரு வீட்டில் மிக நல்ல நிலையில் தயாரித்த ஒரு படுக்கையில் படுத்தாலும் ஒருவருக்கு சிலவேளை தூங்கிக்கொள்ள முடியாமலிருக்கும். ஆனால் ஒரு ஏழை

கிழிந்த படுக்கையின் மீதானாலும், வைக்கோலின் மீதானாலும் அல்லது பாறையின் மீதானாலும் சரி அவருக்கு நல்ல முறையில் தூங்கிக் கொள்ள முடிந்து விடலாம்.

ஆகவே மனிதன் தம் நல-வசதிகளுக்காக இந்த தற்காலிகமான உலகில் அவர்கள் உருவாக்கிக் கொள்ளும் எந்த வழியாகயிருந்தாலும் சரி, அதன்மீது இறை நாட்டம் இல்லாமல் இருந்தால் அதை அவருக்கு அடையவோ அனுபவித்துக் கொள்ளவோ முடியாது. அதனாலாகும் அல்லாஹ் திருமறையில் இவ்வசனம் வாயிலாக கூறிக் கொள்கின்றான்.

**“அல்லாஹ் அல்லாதவற்றை (தங்களுக்கு) பாதுகாவலர்களாக எடுத்துக் கொள்பவர்களுக்கு உதாரணம் சிலந்திப் பூச்சியின் உதாரணம் போன்றது. அது (தனக்காக) ஒரு வீட்டைக் கட்டியது ஆனால் நிச்சயமாக வீடுகளிலெல்லாம் மிகவும் பலவீனமானது சிலந்திப் பூச்சியின் வீடேயாகும். இதை அவர்கள் அறிந்து கொண்டிருப்பார்களாயின் (தங்கள் இணையாக எடுத்துக் கொண்டவற்றின் பல வீனத்தை அறிவார்கள்)** (29 : 42).

அல்லாஹ் நம்மை கவனமூட்டுகின்றான், அவன் தீர்மானமில்லாமல் எதுவும் ஒரு பொழுதும் உங்களுக்கு அடைய முடியாது. உதாரணமாக ஒருவர் பாதுகாப்பான ஒரு கோட்டையில் ஒளிந்துக் கொள்ள சென்றார் என எண்ணுவோம். அது மிக வலிமைவாய்ந்த இடமாகயிருக்கலாம். மக்களின் பார்வையில் அந்நபர் பாதுகாப்பின் வட்டாரத்திற்குள் ஆவார். ஆனால் அல்லாஹ்வின் நாட்டம் இவ்விஷயத்தில் இல்லாமல் இருப்பின் அந்த கோட்டை சிலந்தி பூச்சியின் வலையை விட விலையற்றதாகவே இருக்கும். அதாவது அவ்விடம் பலவீனமானதும் பாதுகாப்பில்லாததும் என்று சுருக்கம்.

உலக நாடுகளில் என்ன நிகழ்ந்ததென்று நமக்கு ஒரு நிரூபணம் செய்வோம். கடந்த காலங்களிலும், அதைப்போன்றே நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் எடுத்துக் கொண்டாலும் சரி. நாங்கள் ஆற்றல் வாய்ந்தவர்கள் என்று அவர்கள் எண்ணிக் கொண்டாலும் ஏதேனும் நொடிகளுக்குள் அல்லாஹ் அவர்களை ஆற்றல் இழந்தவர்களாக மாற்றிக் கொள்ள சக்தியுடையவனாகயிருக்கின்றான். பௌதீகமான அனைத்து வகைப்பட்ட ஆற்றல்களும் நமக்கு உண்டு என்று நாம் எண்ணுகின்றோம். அவையாவும் பலன் வாய்ந்தது என்றும் உலக அறிவின் உதவியும் (Sophisticated)அதற்குண்டு என்றும் நாம் எண்ணுகின்றோம். ஆனால் அல்லாஹ் நாடிக் கொண்டால் இவையாவும் சிலந்தி பூச்சியின் வலைக்கு சமமாகிவிடும். நமக்கு சிந்திப்பதற்காக விஷயத்தைஇவ்வாறு ஒப்பிட்டு(Comparison) எடுத்துக் கூறிக் கொண்டேன் என்று மட்டும். நிச்சயமாகவும் அல்லாஹ்வின் நாட்டவும் அவன் உதவியும் இவ்விஷயத்தில் இல்லை என்றால் இவையாவும் பலனற்றதாகவேயிருக்கும்.

வேறொரு வகையில், இதை மற்றொரு நோக்கம் வாயிலாக நாம் பார்வையிட்டுக் கொண்டால், இந்த ஆற்றல் இழந்த பொருள் அதாவது ஒரு சிலந்தி பூச்சியின் வலையை எடுப்போம். அல்லாஹ் நாடிக்கொண்டால் ஆற்றல்மிக்க ஒரு கோட்டையாக அதை பரிணமிக்கச் செய்வான். மிக சக்தியுடையது என்று எண்ணப்படும் எதையும் அழித்துக் கொள்வதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு பெரிய பொருள்களின் தேவையொன்றுமில்லை. அவனது சக்தியை வெளிப்படுத்தி கொள்வதற்கான ஆற்றலும் அனைத்தையும் அழித்துக் கொள்வதற்கான வலிமையும் அவனுக்குண்டு. அதைப் போன்றே அனைத்து விஷயங்களையும் ஒழுங்கு முறையில் நிலைநாட்டிக் கொள்வதற்கான சக்தியும் அவனுக்கு உண்டு.

எல்லாம் வல்ல அல்லாஹ் “தொய்றன் அபாபீலை”யும் (சங்கமாகயிருக்கும் பறவையினங்கள்) “அப்றஹத்து படைகளையும்” “யானைகளையும்” பயன்படுத்தி அழித்திருகின்றான். இந்த நிகழ்வைக் குறித்து நம் கருத்து என்ன? அந்த பறவைகள் வீசிய கல்கள், பகைவர்களை அழித்துக் கொள்வதற்கு போதுமானதாக இருக்கவில்லையா? அப்பறவைகள் மிக பெரிய கல்களையா வீசிக் கொண்டது? நிச்சயமாகவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கு இவையின் தேவையெதுவுமில்லை. அவன் எண்ணுவதை அவன் செய்கின்றான். மிக பெரியதும் வலிமை வாய்ந்ததுமான ஒன்றை அழித்துக் கொள்ள அவனுக்கு ஒரு மிக சிறிய பொருளே போதுமானது. தூய தூதர் முஹம்மது (ஸல்) வை பாதுகாத்துக் கொள்வதற்கு முற்றிலும் பலவீனமான ஒரு வீடை பயன்படுத்தியதாக நமக்கு கண்டுக்கொள்ளலாம். ஹஸ்ரத் அபுபக்கர்(ரலி) அவர்களுடன் மக்காவில் நின்று மதீனாவை நோக்கி பயணம் மேற்க்கொள்ளும் வேளையில்!

முதலாவதாக, தூய தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபுபக்கர்(ரலி) அவர்களும் ஒரு குகையில் ஒளித்துக்கொண்டனர். எதிராளிகளிடமிருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ள அக்குகைக்குள் அவ்விருவரும் நுழைந்துக் கொண்டபின் அவர்களை காப்பாற்றிக் கொள்வதற்கு அல்லாஹ் திட்டம் வகுத்தான். குகையின் வாயிலில் ஒரு சிலந்திப்பூச்சியின் வலையை உருவாக்கி கொண்டான். அதை தொடர்ந்து அதன் அருகில் ஒரு புறா வந்து இரண்டு முட்டைகளும் போட்டது. அவர்களை பாதுகாத்துக் கொள்வதற்கு அல்லாஹ் பயன்படுத்திய பொருள்கள் என்பது முற்றிலும் பலவீனமான பொருள்களாகயிருந்தது. தூயதூதரை அழித்துக்கொள்ள வந்த பகைவர்கள் குகையின் அருகாமையை எட்டியபோது, அதில் ஒருவர் அக்குகைக்குள் நுழைந்து சோதனைபோட முயற்ச்சித்தான். ஆனால் பழமையான அந்த சிலந்திபூச்சியின் வலையினை பார்த்துகொண்ட நண்பராகிய வேறொருவர் அவரிடம் கூறினான் “உனக்கு என்ன பைத்தியமா?” “நீ எதற்கு அதற்குள் நுழைய போகின்றாய்?” “முஹம்மது பிறப்பதற்கு முன்னதாகவே கோர்க்கப்பட்ட ஒரு சிலந்திபூச்சியின் வலை இருப்பதை நீ காணவில்லையா?” மட்டுமல்ல அதன்

அருகில் புறா இரண்டு முட்டைகளும் போட்டு இருக்கின்றது. மனிதர்கள் இருக்கும் இடத்தில் புறா வருவதில்லை. மனிதன் வசிக்குமிடத்தில் புறா அஞ்சி நெருங்குவதில்லை (என அறிவுரைத்தான்).

அல்லாஹ் திருக்குர்-ஆனில் கூறியது போன்று **"அவன் படைகளை அவனன்றி வேறு எவரும் அறிவதில்லை"** நம் கரங்களில் மிக பெரிய அளவில் செல்வங்கள் இருக்கின்றது. மட்டுமின்றி நமக்கு அல்லாஹ்வின் "குத்ரத்தும்" சக்தியும் உதவியாக உண்டு என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். ஒரு நபருக்கு வெற்றியும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டுமென்றால், அவ்வாறு கிடைக்கவேண்டும் என்று அந்நபர் விரும்புகின்றார் என்றால், அந்நபர் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பால் திரும்ப வேண்டும். மாறாக அல்லாஹ்வுக்கு எதிராக அவர் நிலை கொண்டால் அவரின் சூழ்நிலை மோசமாகிவிடும். மட்டுமின்றி ஒரு சிலந்திபூச்சியின் வீட்டுக்கு சமமான பலன் மட்டுமே அந்நபருக்கு அல்லாஹ் அளித்துக் கொள்வது. எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மிக சக்திவாய்ந்த உதவியால் அவன் நமக்கு அருள்புரிவானாக! இவ்விஷயத்தை எல்லாவற்றிற்கும் மேலாக நாம் உணரவேண்டும். நமக்கு அனைவருக்கும் அல்லாஹ்வின் உதவி அவசியமாகும். அல்லாஹ்வை எனக்கு தேவையில்லை என எவர் ஒருவருக்கும் கூறிக்கொள்ள முடியாது. எப்போதாவது ஒருவர் அவ்வாறு கூறினால் நிச்சயமாகவும் அவருக்கு அழிவு நெருங்கிவிடும். நம் அடிப்படையான நல-வசதிகள் குடிக்கொள்வது அவன் பாலாகும். அவன் வழியில் உழைப்பது வாயிலாகவும் அவனை திருப்தியடையச்செய்வது மூலமாகவும் மட்டுமே நம் நல-வசதிகள் நிலை நிற்பது. இன்ஷா அல்லாஹ். தூய தூதர் முஹம்மது(ஸல்) வுக்கு அல்லாஹ் வழங்கியது போன்று, சிலந்திபூச்சியின் வலைகூட நமக்கு ஒரு கேடயமாக மாறிவிடும். அது ஆற்றலிழந்ததாக இருப்பதில்லை. ஏனெனில் அல்லாஹ் நம்மோடு இருக்கின்றான் என்பதனால் (அது ஆற்றல் வாய்ந்ததாகவே இருக்கும்). இன்ஷா அல்லாஹ். ஆமீன்

**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817